# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No.35/ 2017 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 6 |
| Name | : அழகு |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.09.2025.

--------

3, 4, 6ம் எதிரிகள் ஆஜர், 1, 2, 5 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை:**

நான் இ.கோட்டைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை தெரியாது. சம்பவத்தை பற்றி தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை**

கடந்த 07.12.2014ம் தேதி காலை 11.00 மணியளவில் கருப்பையாவை அவரது அண்ணன் பாண்டி அருவாளால் வெட்டிவிட்டதாக கேள்விப்பட்டு நானும், முத்துச்சாமியும் உத்தப்புரம் சென்று பார்த்தபோது கருப்பையாவின் இடது முன்கை பாதியாக வெட்டப்பட்டு தனியாக கிழே கிடந்தது. அவரது அண்ணன் பாண்டி உடல் முழுவதும் ரத்தக்காயத்துடன் கிடந்தார். நாங்கள் விசாரித்தபோது முனியாண்டி, காசிராஜா ஆகியோர்கள் மாட்டுக்கொட்டம் போடும்போது சொத்து பிரித்து தருவதில் பிரச்சினை ஏற்பட்டு தகராறு செய்தனர். காசிராஜா, கோமாளி (எ) சுப்பையா, கருப்பையா, ராசாமணி, சின்னகருப்பு ஆகியோர்கள் ஒன்றுசேர்ந்து அசிங்கமான வார்த்தைகளால் பேசியதாகவும், காசிராஜா அருவாளை எடுத்து கருப்பையாவை வெட்ட வந்தபோது தடுத்ததில் இடது கை வெட்டப்பட்டு துண்டானது என்று போலீசார்

விசாரணையில் சொல்லிவிட்டு எதிரிகளை காப்பாற்குவதற்காக உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.09.26 16:51:25 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.